**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STC/No. 1481/2022**

**PW - 1**

| | | |
|---|---|---|
| **PW. 1 Cross** | அல்லி க/பெ.செல்லமுத்து | 19.07.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 19.07.2025

**(எதிரி ஆஜர். இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்)**

எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 145(2)–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு MP.No.8/2025 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் சாட்சி வரவழைக்கப்பட்டு செய்யப்படும் குறுக்கு விசாரணை –

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.55 மணி**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :–**

1) என்ன படித்துள்ளேன் என்றால் PUC படித்துள்ளேன். நான் வீட்டுக்குடித்தனமா என்றால் ஆமாம். தனிப்பட்ட முறையில் தொழில் செய்கிறேனா என்றால் பைான்சில் எம்.டியாக இருந்தேன், தற்போது இல்லை, விவசாயமும் செய்து வருகிறேன். எந்த வருடத்தில் இருந்து, என்ன பெயரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் அன்னை பைனான்ஸ், கந்தன் பைனான்ஸ், வேலன் பைனான்ஸ் ஆகியவற்றை 2016 ம் வருடத்தில் இருந்து நடத்தி வந்ததேன். மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தில் எந்தெந்த பைனான்ஸ்கள் செயல்பாட்டில் உள்ளது என்றால் அன்னை பைனான்ஸ் மட்டும் உள்ளது, மற்ற பைனான்ஸ்களை மூடிவிட்டேன். தமிழ்நாடு கிராம வங்கியில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் ஆமாம். பல்லவன் கிராம வங்கி, பாண்டியன் கிராம வங்கி ஆகியவற்றை ஒன்றாக இணைத்து தமிழ்நாடு கிராம வங்கி என்று 01.04.2019 ம் தேதியில் இருந்து இயங்கி வருகிறது என்றால் ஆமாம்.

2) எனது வங்கி கணக்கானது பல்லவன் கிராம வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு பின்னிட்டு தமிழ்நாடு கிராம வங்கியாக மாற்றப்பட்ட பிறகு தொடர்ந்து செயல்பாட்டில் இருந்து வருகிறது என்றால் ஆமாம். வங்கியில் காசோலைகள் மூலம் பரிவர்த்தனை செய்வேன் என்றால் ஆமாம். பல்லவன் கிராம வங்கியில் எனக்கு காசோலை புத்தகம் வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். பல்லவன் கிராம வங்கி காசோலைகள் தமிழ்நாடு கிராம வங்கியாக மாற்றப்பட்ட பிறகு செல்லாது என்று கூறியதால் காசோலைகளை வங்கியில் ஒப்படைத்துவிட்டேன் என்றால் இல்லை, என்னிடம் காசோலை இல்லை. மேற்படி வங்கிகள் இணைப்பு நடந்த பிறகு முன்பு

கொடுக்கப்பட்ட காசோலைகள் செல்லாது என்று கொடுக்கப்பட்ட அறிவிப்பு குறித்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமான விவரங்கள் யாரால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் என்னால் சொல்லப்பட்டது. உரிமம் வாங்காமல் லேவாதேவி தொழில் செய்வது சட்டப்படி தவறு என்று தெரியும் என்பதால் தான் பைனான்ஸ் கம்பெனிகளை ஆரமித்து அதன் மூலம் பைனான்ஸ் செய்து வந்தேன் என்றால் ஆமாம். தனிப்பட்ட முறையில் லேவாதேவி தொழில் செய்வது சட்டப்படி தவறு என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

3) வருமான வரி செலுத்துகிறேனா என்றால் ஆமாம், செலுத்திக்கொண்டுதான் இருக்கிறேன். கடன் கொடுக்கல் வாங்கல் விவரத்தை வருமானவரியில் காட்டி வருகிறேனா என்றால் இல்லை, நான் கடன் கொடுப்பதில்லை, கைமாற்றாக தான் கொடுக்கிறேன், ஒரு சில நபர்களுக்கு மட்டும் தான் வட்டிக்கு கொடுக்கிறேன், மற்றவர்களுக்கு எல்லாம் கைமாற்றுகடன் தான் கொடுக்கிறேன். யார்யாருக்கு வட்டிக்கொடுக்கிறேன் என்றால் தனக்கொடி, நவீன், மனோஜ், ராதா ஆகியோர்களுக்கு கொடுத்தேன். கைமாற்றாக யார்யாருக்கு கொடுத்தேன் என்றால் காயத்திரி, பரிமளா, தனசேகர், ராமலிங்கம், கவி கண்ணன், சுந்தராம்பாள், செல்வி, காந்திமதி, மகாலிங்கம், தங்கராசு, தங்கவேல், துரைசாமி, செல்வக்குமார் ஆகியோர்களுக்கு கொடுத்தேன். மேற்சொன்ன நபர்களை தவிர வேறு யாரிடமாவது கடன் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பத்மா என்ற நபர் மீது CC.No.680/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஆமாம், அது முடிந்துவிட்டது. கலைச்செல்வி என்ற நபர் மீது CC.No.613/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஆமாம், அது முடிந்துவிட்டது. பத்மா என்ற நபர் மீது CC.No.680/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஞாபகம் இல்லை.

4) சசிக்கலா என்ற நபர் மீது CC.NO.663/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஞாபகம் இல்லை. கோமதி என்ற நபர் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம், சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ளது, வழக்கு எண் ஞாபகம் இல்லை. கலைச்செல்வி என்ற நபர் மீது CC.No.602/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் வழக்கு நடத்தினேன், வழக்கு எண் ஞாபகம் இல்லை. காந்திமதி என்ற நபர் மீது STC.No.1237/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஆமாம். ராமலிங்கம் என்ற நபர் மீது STC.No.993/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் ஆமாம். தனசேகரன் என்பவர் பெயரில் தாக்கல் செய்த வழக்கு எண் தெரியுமா என்றால்

ஞாபகம் இல்லை. யார்யார் மீது எந்தெந்த வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது தெரியுமா என்றால் பார்த்தால் சொல்வேன். தனக்கொடி என்பவர் மீது STC.No.990/2023 வழக்கை தாக்கல் செய்து நடத்தினேன் என்றால் வழக்கு எண் ஞாபகம் இல்லை, வழக்கு தாக்கல் செய்துள்ளேன். செந்தில்குமார் என்பவர் மீது STC.No.226/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம், முடிந்து விட்டது. சாரதா என்பவர் மீது STC.No.782/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். தங்கராஜ் என்பவர் மீது STC.No.1483/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மோகன சுந்தரம் என்பவர் மீது STC.No.1542/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம், வழக்கு எண் தெரியாது, பைசலில் முடிந்து விட்டது. கவிக்கண்ணன் என்பவர் மீது STC.No.1544/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். தங்கவேல் என்பவர் மீது STC.No.1545/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். செல்வக்குமார் என்பவர் மீது STC.No.1546/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பரிமளா என்பவர் மீது STC.No.1552/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். சுந்தராம்பாளள் என்பவர் மீது STC.No.1634/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். செல்வி என்பவர் மீது STC.No.1635/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

5) மேற்சொன்ன வழக்குகள் அனைத்தும் என்னால் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்றால் ஆமாம். மேற்சொன்ன வழக்குகளை என்னென்ன தொகைக்காக தாக்கல்செய்தேன் என்றால் பரிமளா ரூ.1 லட்சம், தனசேகர் ரூ.4,50,000/-, ராமலிங்கம் ரூ.4 லட்சம், காந்திமதி ரூ. 1லட்சம், மகாலிங்கம் ரூ.1 லட்சம், செல்வி ரூ.1 லட்சம், துரைசாமி ரூ. 2 லட்சம், செல்வக்குமார் ரூ. 3 லட்சம், தங்கராசு ரூ. 2 லட்சம், தங்கவேல் ரூ.2 லட்சம், தனகொடி ரூ.2,08,000/- மற்றும் ரூ. 2லட்சம், சுந்தராம்பாள் ரூ. 2லட்சம், நவீன் ரூ.8,48,000/-, ராதா ரூ.6,36,000/-, மனோஜ் ரூ.3,18,000/-, கவிக்கண்ணன் ரூ.3 லட்சம், காயத்திரி ரூ.5 லட்சம், பத்மாவிற்கு எவ்வளவு தொகை என்றால் முடிந்துவிட்டதால் ஞாபகம் இல்லை. கலைச்செல்விக்கும் ஞாபகம் இல்லை வழக்கு முடிந்துவிட்டது. சசிக்கலா மீது என்ன தொகைக்கு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்தததே ஞாபகம் இல்லை. கோமதி மீது என்ன தொகை என்றால் ஞாபகம் இல்லை. மோகனசுந்தம் என்பவருக்கு என்ன தொகை என்றால் வழக்கு முடிந்துவிட்டதால் ஞாபகம் இல்லை. சாரதா என்பவருக்கு என்ன தொகை என்றால் ரூ.5 லட்சம் வழக்கு முடிந்துவிட்டது. செந்தில்குமார் என்பவருக்கு என்ன தொகை என்றால் ஞாபகம் இல்லை, வழக்கு முடிந்துவிட்டது.

6) மேற்சொன்ன பணம் கொடுக்கப்பட்டது ஒரே காலகட்டம் என்றால் இல்லை, அவ்வபோது கைமாற்றாக கொடுத்து வருகிறேன். என்னுடைய ஆண்டு வருமான கணக்கு என்னவென்றால் விவசாயம் தான் செய்து வருகிறேன், எனக்கு எனது கணவர் மூலம் பென்சன் வருகிறது, ஆடு மாடு வைத்துள்ளேன், எனது மகன் மூலம் பணம் வருகிறது, எனது கணவர் இறப்பின் மூலம் பணப்பயன் மற்றும் காப்பீடு தொகை வந்தது, 12 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 2003 ம் ஆண்டு. எவ்வளவு நஷ்டஈடு வந்தது என்றால் ஞாபகம் இல்லை. எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடந்து என்றால் எனக்கு தெரியாது எனது வழக்கறிஞர் பார்த்துக்கொண்டார், நீதிமன்றத்திற்கே போகவில்லை. பணப்பயன் எவ்வளவு வந்தது என்றால் 20 வருடங்கள் ஆகிவிட்டதால் சரியாக தற்போது தெரியவில்லை, சுமாராக ரூ. 20 லட்சம் வந்தது. எனக்கு வந்த தொகைகளை வங்கியில் டெபாசிட் செய்து விட்டேனா என்றால் இல்லை.

7) 2003 ல் எனது கணவர் இறந்த பிறகு நான் வீட்டில் தான் இருக்கிறேன் என்றால் ஆமாம். எனது கணவர் இறந்த பிறகு வந்த காப்பீட்டு தொகை மற்றும் பணப்பயன் மற்றும் வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் மேற்படி தொகைகள் மூலம் தான் குடும்பம் நடத்தி வந்தேனா என்றால் அந்த தொகையும் இருந்தது, பென்சன் வந்தது, விவசாய மூலம் வருமானம் வந்தது, எனது மகன் மூலம் தொகை வந்தது. எனது வருமானம் கடன் கொடுக்ககூடிய அளவிற்கு இருந்தது என்பதை காண்பிக்க ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வசதிவாய்ப்புகள் உள்ளது, ஆதாரம் எதுவும் இல்லை, விவசாயத்தின் மூலம் தான் வருமானம் வருகிறது.

8) எனக்கு விவசாயம் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னால் சொல்லப்படுவது போல் எனக்கு எவ்வித விவசாய வருமானமும் கிடையாது என்றும், அதனால் தான் அது தொடர்பாக எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் என்னால் கடன் கொடுக்கப்பட்டதற்கு பராமரித்து வரும் ஆவணங்கள் எதனையும் நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, சீட்டில் தான் எழுதிவைத்துக்கொள்வேன். அந்த சீட்டுகளை பத்திரமாக வைத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு கிழித்து போட்டுவிட்டேன். என்னால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன மற்ற வழக்குகளுக்கு உண்டான கடன் தொகைகையும் சீட்டில் தான் குறித்து வைத்தேனா என்றால் இல்லை,

நோட்டிலும் குறித்து வைப்பேன், வசதி எப்படியோ அவ்வாறு எழுதுவேன். கடன் கொடுக்கும் பொழுது என்ன மாதிரியான ஆவணங்கள் எழுதி வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. மூன்று பைனான்ஸ் கம்பெனிகள் வைத்து நடத்தி வந்துள்ளேன் என்று என்னால் சொல்லப்படும் நிலையில் கடன் கொடுக்கும் போது ஆவணங்கள் என்ன வாங்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல, பைனான்சில் என்னுடைய பாட்னர் அனைத்து பார்த்துக்கொள்வார்கள், நான் கையெழுத்து மட்டும் தான் செய்வேன். பைனான்ஸ் நிறுவனத்திற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்சொன்ன பைனான்ஸ் நிறுவனங்களில் என்னுடைய தொழில முதலீடு என்னவென்றால் எனக்கு தெரியாது என்னுடைய பாட்னர்களுக்கு தான் தெரியும். என்னுடைய பாட்னரின் பெயர் என்னவென்றால் ஞாபகம் இல்லை.

9) மேனேஜிங் டேரக்டர் என்பவரின் பங்கு என்ன என்பது எனக்கு தெரியாதா என்றால் ஆமாம், கையெழுத்து மட்டும் தான் செய்வேன். பைனான்ஸ் நிறுவனம் மூலம் எனக்கு என்ன வருமானம்வந்தது என்பது தெரியுமா என்றால் எனக்கு என்ன தெரியும், என்னுடைய பாட்னருக்கு தான் தெரியும். எந்த பைனான்சில் யார் யார் பாட்னர்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை, பைனான்ஸையும் குளோஸ் செய்து விட்டேன். என்னால் சொல்லக்கூடிய வகையில் எவ்வித பைனாஸ்ம் நடக்கவில்லை என்றும், அதனால் தான் யார் பாட்னர்கள் என்ற விவரத்தை என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல, ஞாபகம் இல்லை என்று தான் சொல்கிறேன். மேற்சொன்ன பைான்ஸ்களில் எம்.டியாக இருப்பதாக என்னால் சொல்லப்படும் நிலையில் அதில் என்ன முதலீடு செய்தேன் என்றே எனக்கு தெரியாது என்று என்னால் சொல்லப்படும் நிலையில் அவ்வாறு ஒரு பைனான்ஸகளே நடைபெறவில்லை என்பதால் தான் மேற்படி விவரங்கள் எதுவும் என்னால் சொல்ல இயவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனம் என்று சொல்லியுள்ள நிலையில் அதன் பதிவு எண் என்னவென்றால் ஞாபகம் இல்லை. எந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டது என்று என்னால் சொல்ல இயலுமா என்றால் 2016 ம் ஆண்டு ஒரு பைனான்ஸ் ஆரமிக்கப்பட்டது, அதற்கு பின்னிட்டு அடுத்து அடுத்து இரண்டு பைனான்ஸ்களை ஆரமித்தேன், அதனால் வருடம் சரியாக தெரியவில்லை. என்ன வகையான ஆவணம் எழுதி பைனான்ஸ நிறுவனம் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் என்னுடைய ஆடிட்டருக்கு தான் தெரியும், எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய ஆடிட்டர் பெயர், எங்கு இருகிறார் என்றால் பெயர் ஞாபகம் இல்லை, பரமத்தி ரோட்டில் ATC டிப்போ எதிரில் இருக்கிறார்.

10) சுமார் எத்தனை முறை ஆடிட்டர் அலுவலகம் சென்றுள்ளேன் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. வருமான வரி கணக்கு எதுவும் என்னால் முறையாக செலுத்தப்படாததால் தான் மேற்படி சங்கதிகள் குறித்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் கடன் கொடுத்தாக சொல்லப்படும் பெரிய தொகைக்கு ஆதரவாக வழக்கு காசோலையை தவிர வேறு எவ்வித ஆவணங்களையும் வாங்கவில்லையா என்றால் இல்லை. என்னால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் கடனானது கேட்டவுடனேயே கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால் இல்லை, ஒரு வாரம் கழித்து தான் கொடுத்தேன். எதிரி எனக்கு ரொம்ப பழக்கம் என்று சொல்லியுள்ள நிலையில் கேட்டவுடன் ஏன் கடன் கொடுக்கவில்லை என்றால் காசோலை கொண்டு வாருங்கள் ஒரு வாரம் கழித்து தருகிறேன் என்று சொன்னேன். கடன் கேட்டதாக சொல்லப்படும் நபருக்கு அதை திருப்பி செலுத்தும் அளவிற்கு வசதி வாய்ப்பு உள்ளதா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் பழக்கமானவர் என்பதால் கொடுத்தேன், அவருக்கு வசதிவாய்ப்பும் உள்ளது.

11) எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வீட்டு வேலை பார்க்கிறார், நகராட்சி வேலைக்கு செல்கிறார். நகராட்சி வேலைக்கு தற்போதும் செல்கிறாரா என்றால் அது எனக்கு தெரியாது. நகராட்சியில் என்ன வேலையில் இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. எதிரி துப்புரவு தொழிலாளி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எனக்கு பழக்கம் என்றால் எந்த வகையில் பழக்கம் என்றால் 7 வருடங்களாக தெரியும். குறிப்பாக எப்படி பழக்கம் என்றால் என்னுடைய வீட்டிற்கு வருவார், பேசுவார். எனது வீடும், எதிரியின் வீடும் தொலைவில் உள்ளது என்றால் ஒரே ஊர் தான். எதிரியின் கணவர் பெயர் என்னவென்றால் ரமேஷ். குழந்தைகளின் பெயர் என்னவென்றால் பெயர் தெரியாது, இரண்டு குழந்தைகள் என்பது தெரியும். அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பள்ளியில் படிக்கிறார்கள், மற்ற விவரம் தெரியாது. எனது வீட்டின் விழாவிற்கு எதிரியானவர் கலந்து கொள்வாரா என்றால் நான் எந்த விழாவும் வைக்கவில்லை. எதிரி குடும்பத்தின் விழாவிற்கு எதுவும் சென்றுள்ளேனா என்றால் இல்லை.

12) ம.சா.ஆ.1 காசோலையில் கையெழுத்திற்கான பேனா மையும், விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டதற்கான பேனாவின் மையும் வெவ்வேறு என்றால் ஆமாம், எதிரி அவருடைய வீட்டில் காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னிலையில் கையெழுத்து மட்டும் போட்டார். என்னால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் கடனை வாங்கி கொண்டு காசோலையை பூர்த்தி செய்து கையொப்பம் போட்டு கொடுத்துள்ளார் என்று

சொல்லியுள்ளேன் என்றால் என் முன்னிலையில் பூர்த்தி செய்ததாக சொல்லவில்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் எதிரி அவருடைய வீட்டிலேயே காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்து கையெழுத்தை மட்டும் என் முன்னிலையில் செய்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னால் சொல்லப்படுவது போல் எதிரி பூர்த்தி செய்து காசோலையை கொண்டு வந்ததாக ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும், என்னால் கடனாக தொகை ரூ.5 லட்சம் தான் கொடுக்கிறேன் என்ற விவரம் எவ்வாறு எதிரிக்கு தெரியும் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பே அவர் என்னிடம் கேட்டார், ரூ. 5 லட்சம் தருவதாகதான் அவரிடம் சொன்னேன். என்னால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் இவ்வழக்கு காசோலை தொகைக்கு முன்பாக வேறு ஏதாவது எதிரிக்கும், எனக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை.

13) எதிரியின் முகவரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரி என்னிடம் வாயில் சொன்னார். எதிரியின் முகவரியை தற்போது சொல்லமுடியுமா என்றால் கணபதி நகர், கதவு எண் ஞாபகம் இல்லை. புகார் மனுவில் எவ்வாறு கதவு எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் அப்போ எனக்கு தெரியும், தற்போது தான் எனக்கு ஞாபகம் இல்லை. எனது வங்கி கணக்கு விவரங்கள் எதிரிக்கு தெரியாது என்றால் ஆமாம். எனக்கு காசோலைகளை பூர்த்தி செய்து வங்கி மூலம் பணம் எடுக்கும் பழக்கம் எனக்கு உண்டு என்றால் இல்லை. எத்தனை வங்கிகளில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் ஒரு சில வங்கிகளில் வைத்துள்ளேன், சரியாக சொல்ல இயவில்லை. எனக்கு கணக்குள்ள அனைத்து வங்கிகளிலும் காசோலை புத்தகம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை, ஒரு சில வங்கியில் வாங்கியுள்ளேன். எந்தெந்த வங்கிகளில் எனக்கு கணக்கு உள்ளது என்ற விவரத்தை சொன்னால் வழக்கு காசோலை தொகை கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் என்னுடைய வங்கி கணக்கில் என்ன தொகை இருந்து வந்தது என்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்து விடும் என்பதாலேயே விவரங்கள் தெரியவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் மொபைல் எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை, வழக்கிற்கு பின்னிட்டு நான் போன் செய்வதில்லை. எனது மொபைல் எண் எதிரிக்கு தெரியாது என்றால் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக ஆரம்பத்தில் அவருக்கு தெரியும். வழக்கு காசோலையை வங்கிக்கு சென்று யார் வசூலுக்காக தாக்கல் செய்தது என்றால் என்னால் தான் செய்யப்பட்டது, வங்கியில் உள்ள நபரிடம் கேட்டு எழுதுவேன்.

14) டெபாசிட் சலான் மட்டும் தான் பூர்த்தி செய்து போடுவேன் என்றால் நான் போடமாட்டேன், எனது மகன் தான் போடுவான். இந்த வழக்கு காசோலையை சலான் பூர்த்தி செய்து தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம், வங்கியில் வேலை செய்பவர்களிடம் கேட்டு பூர்த்தி செய்தேன். சலான் இல்லாமல் வேறு விவரங்கள் காசோலையிலோ அல்லது மற்ற ஆவணங்களிலோ பூர்த்தி செய்தேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் வங்கி கணக்கு எண் மற்றும் மொபைல் எண் எழுதப்பட்டுள்ளது என்றால் நான் வங்கி கணக்கு புத்தகத்தை எடுத்து சென்றேன், வேலை செய்பவர்கள் எழுதிக்கொடுத்தார்கள். ம.சா.ஆ.1 காசோலையின் பின்புறம் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது. சாட்சி தற்போது அவர்களிடம் கேட்டு நான் தான் எழுதினேன் என்று மாற்றி கூறுகிறார். வங்கி சலான் முதல்கொண்டு அனைத்து விவரங்களையும் நான் தான் எழுதினேனா என்றால் ஆமாம், அவர்களிடம் கேட்டு நான் தான் எழுதினேன். என்னால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளுக்கும் உண்டான விவரங்களும் மேற்சொன்னவாறு தான் வங்கியில் வேலை செய்பவர்களிடம் கேட்டு எழுதுவேனா என்றால் எனக்கு தெரிந்ததை எழுதிவிடுவேன், சந்தேகம் இருப்பதை கேட்டு எழுதுவேன்.

15) எங்களுடைய பைனான்ஸ் நிறுவனத்தின் மூலம் கடன் கேட்பவர்களுக்கு எவ்வாறு தொகை கொடுப்பேன் என்றால் அது என்னுடைய பாட்னர்கள் தான் முடிவு செய்வார்கள், நான் எதிலும் தலையிட மாட்டேன். கசோலைகள் மூலமாக பைனான்ஸ் நிறுவனத்தில் பரிவர்த்தனை நடந்துள்ளதா என்றால் காசோலைகள் மூலமும் நடந்தது. எம்.டி என்ற முறையில் காசோலைகளில் என்னால் தான் கையெழுத்திடப்படும் என்றால் ஆமாம். காசோலை எவ்வாறு பூர்த்தி செய்யப்படவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை, மேனேஜர் வேலையில் ஒரு பெண் வேலை செய்து வந்தார், அவர் பூர்த்தி செய்வார், பூர்த்தி செய்யப்படவேண்டிதற்கான விவரத்தை நான் தெரிந்து கொள்ளவதும் இல்லை. பைனான்ஸ் நிறுவனத்திற்கு வங்கி மூலம் தொகை எடுப்போம் என்றால் மேனேஜர் சென்று எடுத்து வருவார். மேனேஜர் எவ்வாறு எடுத்து வருவார் என்றால் அவர் பூர்த்தி செய்வார், கையெழுத்து மட்டும் நான் செய்வேன். Self காசோலையாக போட்டு தொகை எடுத்து வருவாரா என்றால் ஆமாம். ம.சா.ஆ.1 காசோலையில் எந்த இடத்திலாவது குறுக்கு கோடிடப்பட்டுள்ளதா என்றால் குறுக்கு கோடிட வேண்டும் என்பது எனக்கு தெரியாது. குறுக்கு கோடு இல்லை என்றால் அந்த காசோலைகள் Self காசோலை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

16) சலான் எழுதி பூர்த்தி செய்யப்படும் போதே என்னுடைய வங்கி கணக்கு விவரங்கள் சலானில் குறிப்பிடப்படும் என்றால் நான் அதிகமாக வங்கிக்கு செல்வதில்லை, மேனேஜர் தான் பார்த்துக்கொள்வார். சலானிலேயே வங்கி கணக்கு விவரங்கள் பூர்த்தி செய்யப்படும் நிலையில் காசோலையின் பின்பக்கம் வங்கி கணக்கு விவரங்கள் எழுதவேண்டிய அவசியம் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை, வங்கியில் எழுதசொன்னதால் எழுதினேன். அனைத்து விரங்களையும் கேட்டு தெரிந்து கொண்ட பிறகு தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அனைத்து விவரங்களையும் வங்கி ஊழியர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டதாக என்னால் சொல்லப்படும் நிலையில் காசோலையில் குறுக்கு கோடு இடப்படவேண்டும் என்ற விவரத்தையும் அவர்கள் என்னிடம் சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல, சொல்லவில்லை.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 04.40 மணி )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

ஒம்/–கா.செகனாஸ்பானு
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.